## அண்ணா பற்றவைத்த தீ: இந்தித் திணிப்பை தமிழ்நாடு என்றும் எதிர்க்கும்!

# மொழி உரிமை, மாநில உரிமை என்று வந்துவிட்டால், காஷ்மீர் வரை நம் கழகத்தலைவர் பெயர்தான் ஒலிக்கிறது!

**சென்னை, ஜன. 13-**

**சென்னை தெற்கு மாவட்டக் கழகம் சார்பில், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி ஜாஃபர்கான் பேட்டையில் கோலாகலமாக நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

**விழாவில் கலைஞர் கணினிக் கல்வியகம் - கலைஞர் மகளிர் திறன் மேம்பாட்டு மையம் ஆகியவற்றில் பயிற்சிபெற்ற மாணவர்கள் - இளைஞர்கள் 1,500 பேர் மற்றும் மானிய விலையில் ஆட்டோக்களைப் பெற்ற 1,500 பேர் என மொத்தம் 3,000 பேருக்கு பொங்கல் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

**அப்போது அவர், ``மொழி உரிமை, மாநில உரிமை என்று வந்துவிட்டால், காஷ்மீர் வரைக்கும் நம் கழகத் தலைவர், நம் முதலமைச்சரின் பெயர்தான் அவர்களுக்கு ஞாபகம் வருகிறது. அது இந்தியாவெங்கும் ஒலிக்கிறது" என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு:**

## சென்னை தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!




இன்றைக்கு சைதாப்பேட்டை தொகுதியில் அமைச்சர் மா.சுப்பிரமணியம் அவர்களின் ஏற்பாட்டில், `கலைஞர் கணினி பயிலகத்தில்' பயின்ற 1,500 மாணவ - மாணவிகள் மற்றும் புதிய ஆட்டோக்கள் பெற்ற 1,500 ஓட்டுநர்கள் என மொத்தம் 3,000 பேருக்குப் பொங்கல் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சியின் வாயிலாக, உங்களை எல்லாம் சந்திக்கும் வாய்ப்பைப் பெறுவதற்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

### பண்பாட்டின் அடையாளம்

இங்கே வருகை தந்துள்ள அனைவருக்கும் முதலில் எனது ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாகவே பொங்கல் பண்டிகை என்றாலே, நம் அனைவருக்கும் ஒரு கூடுதல் மகிழ்ச்சி ஏற்படும். ஏனென்றால், பொங்கல்தான் நம் பண்பாட்டின் அடையாளம், தமிழரின் வாழ்வியலோடு இணைந்த அடையாளம். இது முழுக்க முழுக்க இயற்கைக்கு நன்றி செலுத்தும் விழா. அதேபோல், உழைப்பைக் கொண்டாடும் திருவிழா. இவ்வளவு சிறப்பான பொங்கல் விழாவை, நாம் அனைவரும் இங்கே இணைந்து கொண்டாடிக்கொண்டிருக்கிறோம்.

### குடியிருக்க சைதை தொகுதிக்கு வந்துவிடலாமா என்ற எண்ணம் தோன்றுகிறது!

**எனக்கு முன்பாகப் பேசிய சகோதர, சகோதரிகள் அனைவரும் தாம் பெற்ற பயன்களைப் பற்றி இங்கே பெருமிதத்தோடு குறிப்பிட்டார்கள். அவர்களின் மகிழ்ச்சியையும், உணர்வுகளையும் பார்க்கும்போது மிகுந்த நெகிழ்ச்சியாக உள்ளது. கணினிப் பயிலகமாக இருக்கட்டும், ஆட்டோ அல்லது கார் வழங்கும் திட்டமாக இருக்கட்டும், அழகுக்கலைப் பயிற்சியாக இருக்கட்டும் – இப்படி ஒவ்வொன்றையும் உங்கள் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரும், அமைச்சருமான அண்ணன் மா.சுப்பிரமணியன் மிகச் சிறப்பாகச் செய்து வருகிறார். அவர் செய்யும் பணிகளைப் பார்க்கும்போது, நான் குடியிருக்கும் மயிலாப்பூர் தொகுதியிலிருந்து மாறி, சைதாப்பேட்டை தொகுதிக்கே வந்துவிடலாமா என்ற எண்ணம் தோன்றும் அளவுக்கு இங்கே பணிகள் சிறப்பாக நடைபெறுகின்றன. அதனால்தான், இங்கே வந்திருக்கும் நீங்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு, சிரித்த முகத்துடன் அமர்ந்திருக்கிறீர்கள். உங்கள் முகத்தில் நிலவும் இந்த மகிழ்ச்சி எப்போதும் தொடர வேண்டும்!**

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, திராவிட முன்னேற்றக் கழகம் இத்தகைய சிறப்பான நிகழ்ச்சிகளை, சைதாப்பேட்டையில் மட்டுமல்லாது, கடந்த நான்கு ஐந்து நாட்களாக தமிழ்நாடு முழுவதும் அனைத்து இடங்களிலும் மிக விமரிசையாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி வருகிறது. கழகத்தின் சார்பாக மட்டுமன்றி, தமிழ்நாடு அரசின் சார்பாகவும் பல்வேறு பொங்கல் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### இனிப்பான செய்திகள்

பொங்கலை முன்னிட்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை, இனிப்பான, மகிழ்ச்சியான செய்திகளை வழங்கியிருக்கிறார். குறிப்பாக, கடந்த மாதம் வரை `கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' திட்டத்தில் ஒரு கோடியே 13 லட்சம் மகளிர் பயன்பெற்று வந்தார்கள். இந்த ஜனவரி மாதத்திலிருந்து பயனாளிகளின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டு, தற்போது ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 30 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை, நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார். அது மட்டுமல்ல, சில நாட்களுக்கு முன்பு 10 லட்சம் கல்லூரி மாணவ-மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்.

இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள் அத்தனை பேருக்கும் இலவச மடிக்கணினி வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார். இதுமட்டுமன்றி, மகளிருக்கான `விடியல் பயணத் திட்டம்', முதலமைச்சரின் 'காலை உணவுத் திட்டம்', மாணவிகளுக்கான 'புதுமைப் பெண் திட்டம்', மாணவர்களுக்கான 'தமிழ்ப் புதல்வன் திட்டம்', 'நான் முதல்வன் திட்டம்' எனப் பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் இன்று செயல்படுத்தி வருகிறார்.

### பொங்கல் பரிசு

இவற்றையெல்லாம் விடக் கூடுதல் மகிழ்ச்சியாக, இந்த ஆண்டு பொங்கலுக்காக நம் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்துக் குடும்பங்களுக்கும் 3,000 ரூபாய் ரொக்கத் தொகையைப் பொங்கல் பரிசுடன் சேர்த்துக் கொடுத்திருக்கிறார். இன்று தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொரு வீட்டிலும் திராவிட மாடல் அரசின் சாதனைகள் போய் சேர்ந்து கொண்டிருக்கின்றன. இங்கே உழைப்பின் அடையாளமாக இருக்கின்ற ஆட்டோ ஓட்டுநர்கள் இத்தனை பேர் வந்திருக்கிறீர்கள்; இது கூடுதல் மகிழ்ச்சி அளிக்கிறது. அதிலும் 50 சதவிகிதம் பேர் மகளிர் ஆட்டோ ஓட்டுநர்கள் வந்திருப்பதைப் பார்க்கும்பொழுது மிகுந்த பெருமையாக இருக்கிறது.

> **முதல்வர் தலைமையிலான திராவிட மாடல் அரசு தமிழ்நாடு மாணவர்கள் – இளைஞர்கள் – உழைக்கும் மக்களுக்காகச் செயல்படுத்தி வரும் திட்டங்களை எடுத்துச் சொல்லி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு கழகமும் – கழக அரசும் என்றும் துணை நிற்கும்!**

நூறு ஆண்டுகளுக்கு முன்பு, பெண்கள் வீட்டை விட்டு வெளியே வருவதற்கு உரிமை கிடையாது, படிப்பதற்கு உரிமை கிடையாது, ஆண்களோடு பேசுவதற்கும் உரிமை கிடையாது. இந்த நிலையை ஒழிக்க வேண்டும், பெண்கள் சமுதாயத்தில் முன்னேற வேண்டும் என்பதற்காகவே, திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டது. திராவிட இயக்கம் தொடங்கப்பட்டதன் நோக்கமே அதுதான். தந்தை பெரியார் அவர்கள், பெண்கள் கையில் இருக்கக்கூடிய சமையல் கரண்டியைப் பிடுங்கிவிட்டு, அவர்கள் கையில் புத்தகத்தைக் கொடுக்க வேண்டும், பெண்கள் படித்து முன்னேற வேண்டும் என்று சொன்னார்.

### புத்தகத்துடன் மடிக்கணினி

இன்று நம் முதலமைச்சர் அவர்கள் புத்தகத்தை மட்டுமல்ல, அதனுடன் மடிக்கணினியையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறார். அதன் வெளிப்பாடுதான், இன்று இத்தனை மகளிர் இவ்வளவு பெருமையுடன் ஆட்டோ ஓட்டுநர்களாக அமர்ந்திருக்கிறீர்கள். உங்களைப் பார்க்கும்பொழுது மிகுந்த பெருமையாக இருக்கிறது.

இன்று சென்னையின் ஒரு அடையாளமாக இருப்பது இங்கே வந்திருக்கக்கூடிய ஆட்டோ ஓட்டுநர்களாகிய நீங்கள்தான். இன்று நாமெல்லாம் கூகுள் மேப் (Google Map) பயன்படுத்துகிறோம். ஆனால், கூகுள் மேப் இல்லாத காலத்திலேயே சென்னையின் வரைபடமாக (Map) இருந்தவர்கள் இங்கே வந்திருக்கக்கூடிய ஆட்டோ ஓட்டுநர்களாகிய நீங்கள்தான். அந்த அளவுக்கு சென்னையின் ஒவ்வொரு சாலையையும், ஒவ்வொரு தெருவையும் துல்லியமாகத் தெரிந்து வைத்திருப்பவர்கள் நீங்கள். அப்படிப்பட்ட ஆட்டோ ஓட்டுநர்களைச் சந்தித்து, உங்களோடு பொங்கல் கொண்டாடுவது எனக்குக் கூடுதல் மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்த நேரத்தில் நம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களுக்கு என்னுடைய சிறப்பான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், இவ்வளவு இளைஞர்களுக்குக் கணினி பயிற்சி கொடுப்பது ஒரு சாதாரண விஷயம் கிடையாது. முன்னெல்லாம் கல்வியறிவு பெற்றவர்கள் என்று சொன்னால் எழுதப் படிக்கத் தெரிந்தால் போதும்; ஆனால், இன்றைக்கு அது போதாது. இப்போது கல்வியறிவு என்று சொன்னால் கண்டிப்பாகக் கணிப்பொறி அறிவும் தெரிந்து கொள்ள வேண்டும் என்றுதான் சொல்கிறார்கள்.

### மாணவிகளுக்குக் கணினிப் பயிற்சி

இனி வரக்கூடிய காலத்தில் உடல் சார்ந்த திறனைத் தவிர, டிஜிட்டல் திறன்கள் இருப்பவர்களுக்குத்தான் எதிர்காலம் இன்னும் பிரகாசமாக இருக்கிறது.அந்த வகையில், இங்கே இருக்கக்கூடிய 1,500 மாணவ மாணவிகளுக்குக் கணினி பயிற்சி கொடுத்து, அவர்களுடைய எதிர்காலத்தை ஒளிமயமாக ஆக்கிக் கொண்டிருக்கிறார் மா.சுப்பிரமணியன். அவருக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு காலத்தில் நம்முடைய இளைஞர்களுக்குத் தகுதி, திறமை கிடையாது என்று ஒதுக்கி வைத்தார்கள். ஆனால், நம் தமிழ்நாட்டு இளைஞர்கள், ``எங்களுக்கு வாய்ப்புக் கொடுத்துப் பாருங்கள், நாங்களும் சாதித்துக் காட்டுவோம்" என்று சொன்னார்கள். அதை இன்றைக்குச் சாதித்துக் காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குச் சாட்சியாகத்தான் இத்தனை மாணவிகள், இளைஞர்கள் இங்கே அமர்ந்திருக்கிறீர்கள்.

இன்றைக்கு இத்தனை மாணவிகள் படித்திருக்கிறீர்கள், இவ்வளவு முன்னேறியிருக்கிறீர்கள் என்றால், வெளிநாட்டுக்குச் சென்று வேலை செய்து கொண்டிருக்கிறார்கள், பன்னாட்டு நிறுவனங்களின் பல உயர் பதவிகளில் அமர்ந்திருக்கிறார்கள். அதற்கு மிக முக்கிய அடிப்படை காரணம், பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்த அந்த இருமொழிக் கொள்கை என்பதை யாராலும் மறுக்க முடியாது.

### மீண்டும் மும்மொழித் திட்டம்

தமிழ்நாட்டில் தமிழுக்கும் ஆங்கிலத்துக்கும் மட்டும்தான் இடம், இந்தித் திணிப்புக்கு என்றுமே இடம் இல்லை என்று சொன்னவர்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள். அந்த நிலைமையை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அப்படி இருமொழிக் கொள்கை மூலமாக முன்னேறிய நம்மை, இன்றைக்கு திட்டம் போட்டு ஒன்றிய பா.ஜ.க அரசு மீண்டும் மும்மொழித் திட்டத்தைக் கொண்டு வந்து, இந்தியைக் மீண்டும் நம்மீது திணிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்காகக் கொண்டு வரப்படுவதுதான் புதிய கல்விக் கொள்கைத் திட்டம்.

இந்த புதிய கல்விக் கொள்கைத் திட்டத்தைக் கொண்டு வந்தபோது எல்லா மாநிலங்களும் ஏற்றுக்கொண்டன. ஆனால், நம்முடைய முதலமைச்சர் மட்டும் ``ஏற்றுக்கொள்ள மாட்டேன்" என்று கூறிவிட்டார். ஏனென்றால், இந்தப் புதிய கல்விக் கொள்கையில் மீண்டும் எப்படியாவது இந்தியைத் தமிழ்நாட்டிற்குள் திணிக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மீண்டும் சமஸ்கிருத மொழியைத் தமிழ்நாட்டிற்குள் எப்படியாவது திணிக்க வேண்டும் என்ற அம்சங்கள் புதிய கல்விக் கொள்கையில் இருக்கின்றன. மீண்டும் குலக்கல்வித் திட்டத்தை எப்படியாவது தமிழ்நாட்டிற்குள் திணிக்க வேண்டும் என்று புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொள்ளச் சொல்கிறார்கள். ஒன்றிய அரசு, நாம் கட்டியிருக்கக்கூடிய வரிப் பணத்தைப் பிரித்து நமக்குக் கொடுக்க வேண்டும்.

கல்வி நிதியாக மட்டும் தமிழ்நாட்டிற்கு ஒவ்வொரு ஆண்டும் 2,500 கோடி ரூபாய் கொடுக்க வேண்டும். ஒன்றிய அரசு அதை முறையாகப் பிரித்துக் கொடுக்க வேண்டும். ஆனால் தமிழ்நாட்டிற்கு மட்டும் சென்ற ஆண்டிற்கு வழங்கவில்லை. ஏனென்று கேட்டால், ``புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்கிறீர்கள், அதனால் கொடுக்க முடியாது; ஏற்றுக்கொண்டால் கொடுக்கிறோம்" என்று சொல்லி மிரட்டிப் பார்த்தது ஒன்றிய அரசு. ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், ``நீங்கள் புதிய கல்விக் கொள்கை மூலமாக மீண்டும் இந்தியைத் திணிக்கப் பார்க்கிறீர்கள், சமஸ்கிருதத்தைக் கொண்டு வரப் பார்க்கிறீர்கள். 2,500 கோடி இல்லை, நீங்கள் 10,000 கோடி கொடுத்தாலும் என்றைக்குமே தமிழ்நாட்டிற்குள் நான் புதிய கல்விக் கொள்கையை அனுமதிக்க மாட்டேன்; என் தமிழ்நாட்டு மக்கள் மீது அனுமதிக்க மாட்டேன்" என்று சொல்லி இன்றைக்குச் சட்டப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்.

அன்றைக்கு மட்டுமல்ல, இன்றைக்கும் இந்தித் திணிப்பைத் தமிழ்நாடு எதிர்க்கும். ஏனென்றால் இது பேரறிஞர் அண்ணா அவர்கள் பற்ற வைத்த தீ, தலைமுறை தலைமுறையாகப் பரவிக் கொண்டிருக்கக்கூடிய தீ. இன்றைக்கு அண்ணா வழியில், கலைஞர் வழியில்தான் நம் முதலமைச்சர் அவர்கள் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார். இப்படி மொழி உரிமை, நிதி உரிமை, மாநில உரிமை என்று இன்றைக்கு இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து முதலமைச்சர்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக, வழிகாட்டியாக இருக்கக் கூடியவர்தான் நம் முதலமைச்சர். அதற்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

சமீபத்தில் நீங்கள் தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள். ஜம்மு காஷ்மீரின் முன்னாள் முதலமைச்சர், ஜம்மு காஷ்மீர் மக்கள் ஜனநாயகக் கட்சியினுடைய தலைவர் மெகபூபா முஃப்தி அவர்கள் காஷ்மீரில் பத்திரிகையாளர்களைச் சந்திக்கிறார். பத்திரிகையாளர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கெல்லாம் தன் தாய்மொழியான காஷ்மீரியில் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். அப்பொழுது பத்திரிகையாளர்கள் குறுக்கிட்டு, ``அம்மா நீங்கள் உருதுவில் பேசுங்கள் அல்லது இந்தியில் பேசுங்கள்" என்று சொல்லும் பொழுது அந்த அம்மையார் சொல்கிறார்கள். ``என்னை என் தாய்மொழியில் பேசக்கூடாது என்று சொல்கிறீர்களே, உங்களுக்குத் தைரியம் இருந்தால் தமிழ்நாட்டுக்குச் சென்று அங்கு இருக்கின்ற முதலமைச்சர், என்னுடைய சகோதரர் ஸ்டாலினைப் பார்த்து இதைச் சொல்வதற்குத் தைரியம் இருக்கிறதா?" என்று கேட்கிறார்கள். காஷ்மீரில் இருக்கக்கூடிய ஒரு முன்னாள் முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சரை ஒரு எடுத்துக்காட்டாகச் சொல்கிறார். இப்படி மொழி உரிமை, மாநில உரிமை என்று வந்துவிட்டால், காஷ்மீர் வரைக்கும் நம் தலைவர், நம் முதலமைச்சரின் பெயர்தான் அவர்களுக்கு ஞாபகம் வருகிறது. இந்தியாவெங்கும் ஒலிக்கிறது.

### நிதி உரிமை பறிப்பு

இன்னும் ஒரு உதாரணம் சொல்ல வேண்டும் என்றால், கடந்த 10 ஆண்டுகளில் ஒன்றிய பா.ஜ.க. அரசு யாருமே பேச முடியாத சமஸ்கிருத மொழியின் வளர்ச்சிக்கு 2,600 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஆனால், நம்முடைய தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஒன்றிய அரசு ஒதுக்கியது வெறும் 180 கோடி ரூபாய் மட்டுமே. சமஸ்கிருதத்துக்கு 2,600 கோடி, தமிழுக்கு வெறும் 180 கோடி. இன்னும் பல வகையில் தமிழ்நாட்டின் நிதி உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்குச் சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டத்திற்கு ஒன்றிய அரசு கொடுக்க வேண்டிய நிதித் தொகையைக் கொடுக்கவில்லை.

> **தமிழ்நாட்டின் சுயமரியாதையையும் அடையாளத்தையும் வீழ்த்திட நினைக்கும் பாசிஸ்ட்டுகள் – அடிமைகளை வீழ்த்தி, மீண்டும் திராவிட மாடல் அரசினை அமைக்க அனைத்துக் தரப்பினரும் ஆதரவளிக்க வேண்டும்!**

ஒன்றிய அரசு கொடுக்க வேண்டிய 10,000 கோடி ரூபாய்க்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஜி.எஸ்.டி வரி வசூல் நிலுவைத் தொகை கிட்டத்தட்ட 10,000 கோடி ரூபாயை ஒன்றிய அரசு இன்னும் கொடுக்கவில்லை. இப்படிப் பல்வேறு திட்டங்களில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் நிதி உரிமையைப் பறித்துக் கொண்டிருக்கிறது.

மதுரை, கோவை மெட்ரோ திட்டங்களுக்கு ஒன்றிய அரசு இதுவரை அனுமதி கொடுக்கவில்லை. எய்ம்ஸ் மருத்துவமனை உங்களுக்குத் தெரியும்; ஒரேயொரு செங்கல்லை வைத்துவிட்டு "எய்ம்ஸ் மருத்துவமனை வந்துவிட்டது" என்று போய்விட்டார்கள். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அப்படி கிடையாது. ஆட்சிக்கு வந்ததும், கிண்டியில் இருக்கக்கூடிய கலைஞர் உயர் சிறப்பு மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டி, 240 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அந்த மருத்துவமனையைத் திறந்து வைத்திருக்கிறார்.

இவ்வளவு ஓரம் வஞ்சனைகளையும் கொடுமைகளையும் ஒன்றிய அரசு செய்துவிட்டு, இன்றைக்குப் பாசிஸ்டுகள் டெல்லியில் அமர்ந்து கொண்டு தமிழ்நாட்டை எப்படியாவது ஆளலாம் என்று முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பழைய அடிமைகளும் அவர்களோடு சேர்ந்து இன்றைக்குப் புது அடிமைகளும் சேருவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

எத்தனை பேரை அழைத்துக்கொண்டு வந்தாலும் தமிழ்நாட்டு மக்கள் என்றைக்குமே நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தையும், நம்முடைய முதலமைச்சர் அவர்களையும்தான் மீண்டும் தேர்ந்தெடுப்பார்கள்.

### வாக்காளர் பட்டியலில் குளறுபடி

அதை எப்படியாவது தடுக்க வேண்டும் என்று வாக்காளர் பட்டியலில் குளறுபடிகளைச் செய்கிறார்கள். அதை முதன்முதலில் எதிர்த்தது திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் நம்முடைய தலைவர்தான். இந்தச் சீராய்வு நடவடிக்கைகளின் மூலமாகத் தமிழ்நாட்டில் சுமார் 97 லட்சம் வாக்காளர்களை நீக்கியிருக்கிறார்கள். இந்த 97 லட்சம் வாக்காளர்கள் மிக முக்கியமானவர்கள். பெரும்பான்மையானவர்கள் யார் என்று பார்த்தீர்கள் என்றால், மகளிருடைய வாக்குகள் மற்றும் சிறுபான்மை மக்களுடைய வாக்குகள். ஏனென்றால், அவர்களுக்குத் தெரியும், நிச்சயம் மகளிரும் சிறுபான்மையினரும் பா.ஜ.க-விற்கும் அவர்களின் அடிமைகளுக்கும் வாக்களிக்க மாட்டார்கள் என்று திட்டம் போட்டு இத்தனை வாக்காளர்களை நீக்கியிருக்கிறார்கள்.

சென்னையில் மட்டும் 14 லட்சம் வாக்காளர்களை நீக்கியிருக்கிறது தேர்தல் ஆணையம். இங்கே வந்திருக்கக்கூடிய உங்களிடம் நான் உரிமையோடு கேட்டுக்கொள்வது, நீங்கள் ஒவ்வொருவரும் உங்களின் பெயர் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருக்கிறதா என்று சரிபாருங்கள். உங்கள் பெயர் மட்டுமல்ல, உங்களுக்குத் தெரிந்தவர்கள், உங்கள் குடும்பத்தினர், நண்பர்கள் ஆகியோரின் பெயர்கள் எல்லாம் இடம்பெற்றிருக்கிறதா என்று பாருங்கள்.

பெயர்களைச் சேர்ப்பதற்கு வருகின்ற 18-ஆம் தேதி வரை நமக்குக் கால அவகாசம் இருக்கிறது. கழகத்தின் பி.எல்.ஏ 2-கள் (PLA 2) மூலமாக உங்களுடைய பெயரை மீண்டும் வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கான முயற்சியில் தயவுசெய்து ஈடுபடுங்கள். தகுதியான ஒரு வாக்காளரின் பெயர் கூட வாக்காளர் பட்டியலில் இருந்து விடுபட்டு விடக்கூடாது.

உங்களின் வாக்குரிமையை நாம் பாதுகாத்தாக வேண்டும். வர இருக்கின்ற 2026 சட்டமன்றத் தேர்தல் என்பது, தமிழ்நாட்டின் சுயமரியாதையை, நம்முடைய மாநில உரிமையைப் பாதுகாக்கின்ற தேர்தல் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். `திராவிட மாடல்' முதல் பாகம் நான்கரை ஆண்டு ஆட்சியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சிறப்பாகச் செய்திருக்கிறார்.

### 200-க்கும் அதிகமான தொகுதிகள்

இரண்டாம் பாகத்தை நிச்சயம் தமிழ்நாட்டு மக்கள் அமைத்துக் கொடுப்பார்கள். அதில் நம் ஆட்சியின் சாதனைகள் நிச்சயம் தொடரும். ஆகவே, இந்த அரசுக்கு நீங்கள் ஆதரவாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் 200-க்கும் அதிகமான தொகுதிகளில் நிச்சயம் திராவிட முன்னேற்றக் கழகம் வென்று மீண்டும் ஆட்சி அமைக்கும். மீண்டும் நம்முடைய முதலமைச்சர்தான் முதலமைச்சர் நாற்காலியில் அமருவார்.

அதற்குத் தொடக்கமாக இந்தச் சென்னை தெற்கு மாவட்டமும், இந்தச் சைதாப்பேட்டை தொகுதியின் வெற்றியும் நிச்சயமாக இருக்க வேண்டும். கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க வேண்டும் என்றால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பில் அமர வேண்டும் என்றால், வந்திருக்கக்கூடிய சகோதர சகோதரிகள் நீங்கள் அத்தனை பேரும் அடுத்த இரண்டு மாதங்கள் களத்தில் இறங்கிப் பிரச்சாரம் செய்ய வேண்டும். ஏன் இந்தப் பகுதி மக்கள், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்ற காரணங்களை மக்களிடத்தில் கொண்டு போய் சேர்க்க வேண்டும்.

இந்தச் சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த மா.சுப்பிரமணியன் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்து, வந்திருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பிரபாகர் ராஜா, மாநகரத் துணை மேயர் மகேஷ்குமார், கழக இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் எஸ்.ஜோயல், கவிஞர் காசிமுத்து மாணிக்கம், ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., மாவட்டக் கழக நிர்வாகிகள் குணசேகரன், வாசுகி பாண்டியன், வேளச்சேரி பாஸ்கர், பகுதிக் கழகச் செயலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், வெ.ஆனந்தம், விநாயகமூர்த்தி, சைதை அன்பரசன், வழக்கறிஞர் ஸ்ரீதர், மின்னல் கந்தப்பன், கலக்காடு எல்லப்பன், சைதை சாதிக், மணிகண்டன், அஞ்சல்ராமன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கிருஷ்ணகுமார், கோட்டூர் பிரகாஷ், சங்கர் கணேஷ், ராமாபுரம் ரவி, ஜே.இ.பாண்டியன், தியாகராஜன், சண்முகநாதன், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ஜிம் பிரபு, கொடிபாலா, வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் திலீப், ரஞ்சித், வட்டக் கழகச் செயலாளர்கள் அட்கோ கமலநாதன், சைமு சேகர், மாமன்ற உறுப்பினர் சுப்பிரமணி, கலைஞர் கல்வியக அறக்கட்டளை உறுப்பினர்கள் சிவமணி, ஸ்ரீதரன், தமீம் அன்சாரி, சிங்கப்பூர் விஜயகுமார், நாராயணன், ஜேசுதாஸ், தமிழ்வேல் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.